Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.114/2020

| | |
|---|---|
| | Prosecution PW5 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ராம்குமார் |
| Father's Name | : | சீரங்கன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.01.2021.

முதல் விசாரணை

நான் கரூர், தான்தோன்றிமலை, பாரதியார் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பூ வியாபாரம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 07.09.2019 ஆம் தேதி இரவு 11.00 மணி சுமாருக்கு ஒத்தையூரில் எனது நண்பர் கேசவன் அவர்கள் வீட்டு முன்பாக நடந்த நகை அறுந்து சென்ற வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள்.

அ.சா.5 ராம்குமார் (ஒம்) இரா.சரவண பாபு

நீதித்துறை நடுவர் எண்.1(கூ.மு.பொ), கரூர்

அதற்கு சாட்சியாக நானும் பூபதி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். பார்வை மகசர் அ.த.சா.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அ.சா.1 செல்லம்மாள் எனக்கு குடும்ப நண்பர் ஆவார், அவரை எனக்கு கடந்த 15 ஆண்டுகளாக தெரியும். எனது நண்பர் கேசவனின் அம்மா அ.சா.1-ன் நகையை அறுத்து கொண்டு போனதாக தகவல் கேள்விபட்டு நான் அவரது வீட்டிற்கு சென்றேன். அன்று இரவு 9.00 மணிக்கு முத்துசாமி என்பவர் எனக்கு செல்போன் மூலம் தகவல் சொன்னார். முத்துசாமி நெம்பர் என்னிடம் இல்லை, அவரிடம் எனது நெம்பர் உள்ளது. முத்துசாமியை எனக்கு கடந்த 10 வருடங்களாக தெரியும். அவரது அப்பா பெயர் மற்றும் முகவரி தெரியாது. அவர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. போலீசார் சம்பவ இடத்தில் நாங்கள் மேப் போடுவதாக சொல்லி என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். சம்பவம் இந்த இடத்தில் நடந்துள்ளது என்று கூறுவதற்காக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். அ.சா.1-ன் வீடு கிழக்கு பார்த்த வீடாகும். அது தனிவீடு அல்ல, வீட்டை ஒட்டி மேல்புறமும், கீழ்புறமும் வீடுகள் உள்ளன. இருபுறமும் உள்ள வீடுகளில் குடியுள்ளார்கள். சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தபோது அருகில் குடியிருந்தவர்களும் சம்பவ இடம் வந்தார்கள், அவர்களையும் போலீசார் விசாரித்தனர். அவர்களிடம் கையெழுத்து பெறவில்லை. சம்பவ இடத்தில் உள்ள ரோடு, வீடு மற்றும் சம்பவ இடத்தை மட்டும் குறித்து படம் வரைந்தார்கள். நான் காவல்நிலையம் செல்லவில்லை. நான் காவல்நிலையம் செல்லவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது குடும்ப நண்பர் என்பதால் 15 வருடங்களாக அவருடைய மகன் கேசவன் என்பவர் பழக்கம் என்பதால் பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.சா.5 ராம்குமார்

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(ஒம்) இரா.சரவண பாபு
நீதித்துறை நடுவர் எண்.1(கூ.மு.பொ),
கரூர்.